**செய்தி வெளியீடு எண் : 1150** **நாள் : 11.06.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு**

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கிராமத்தில், கஜா புயலினால் சேதமடைந்த 60 ஆண்டுகால அரசுப் பள்ளியை, அந்தக் கிராமத்தில் வசித்த தாய் தனசேகரி அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, சிங்கப்பூர் வாழ் சகோதரர்களான இளங்கோவன், முத்தழகன், இராஜகோபால் ஆகியோர் நம்ம_பள்ளி திட்டத்தின்படி செப்பனிட்ட செய்தியறிந்து முதலமைச்சராக மட்டுமல்ல, திருவாரூர்க்காரனாகவும் உள்ளம் நெகிழ்ந்து போனேன்.

பள்ளியைச் செப்பனிட்டதோடு, 'தனசேகரி அம்மாள் அறிவரங்கம்' என மறைந்த தங்களது தாயின் பெயரை அரசின் அனுமதியோடு அப்பள்ளிக் கட்டடத்திற்குச் சூட்டிய அந்தச் சகோதரர்கள், அந்த ஊரின் பெயர்போல் பெருகவாழ்வார்கள்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in